www.tamilarangam.net

# அறிவோர் பக்கம்

**சித்திரை 1999**

## பழமொழி விளக்கம்

## "நாற்பதுக்கு மேல் நாய்க்குணம்"

*பிரம்மன் மனிதனையும் மனிதனுக்குத் துணையாக நாய், மாடு, ஆந்தை ஆகிய மூன்றையும் படைத்து ஒவ்வொருவருக்கும் தலா வயது நாற்பது என்றும் கொடுத்தாராம். உலகத்தில் படும் துன்பங்களைக் கண்ட நாயும் பிறவும் தங்களைப் படைத்த இறைவனிடத்திலே சென்று உலகில் இருபது ஆண்டே வாழ விரும்புகிறோம், மீதி ஆயுட் காலம் தேவையில்லை என்றனவாம். அப்போது மனிதன் முன் வந்து அந்தக் காலத்தை எனக்குக் கொடுத்துவிடுங்கள் நான் பூவுலகில் வாழ்ந்து பார்க்கிறேன் என்றானாம். அதன்படி 41–60வயதுவரை மனிதன் நாய் வயதையும் 61–80 வயதுவரை மாட்டின் வயதையும் 81–100வயதுவரை கோட்டான் வயதையும் பெற்று வாழ்கிறானாம்.*

*அதன் விளைவு?*

*மனிதன் நாற்பதுக்கு மேல் நாயாக மாறிச் சீறி விழுகிறான். தன்னைப் போன்ற பிற மனிதரைக் கண்டு பொறாமை கொண்டு விரட்டுகிறான். அறுபதுக்கு மேல் நிதானம் இழந்து மாடு போல் பொக்கை வாயை மென்று கொண்டு தலையை அசைத்துக் கொண்டு பழங்கால வாழ்க்கையைப்பற்றி நினைத்து அசை போட்டுக்கொண்டிருக்கிறான். எண்பதுக்கு மேல் கண்ணொழி மங்கிக் கண்ணை மட்டும் ஆந்தை விழிப்பது போல் திறந்து வைத்துக் கொண்டு, இரவில் பிறர் தூங்கும் போது, தான் மட்டும் தூங்காது விழித்திருந்து ஆந்தையைப் போல கீச்சலிட்டுக்கொண்டு சிறுவர்களுக்குப் பயங்காட்டும் பொருளாய் ஒரு மூலையில் முடங்கிக்கிடக்கிறான். நாற்பது வயதுவரை தன்வயது கொண்டு மனிதனாக வாழ்ந்து போகப் போக மனிதன் மிருகமாகவே மாறிவிடுகிறான். மெய்ஞானம் இல்லையேல் அஞ்ஞானம் கொண்டு மிருகமாக மனிதன் வாழவேண்டியதுதான்.*

www.tamilarangam.net

# தாலி....

தாலி என்பது இந்துக்களின் கலாச்சாரத்தில் இல்லாத ஒன்று. முஸ்லீம்களின் படையெடுப்பு இந்தியாவில் நடந்தபோது உள்ளே புகுந்தது தான் இந்தத் தாலி. முஸ்லீம்கள் இந்தியாவிற்கு படையெடுத்து வந்தபோது, அவர்களங் தங்களது கண்ணில் பட்ட பெண்களையெல்லாம் சொந்தமாக்கிக் கொண்டார்கள். திருமணமான பெண்களை மட்டும் ஒன்றும் செய்யமாட்டார்களாம். அதனால் இந்தப் பெண் திருமணமானவள் என்று அடையாளம் காட்டுவதற்காகத்தான் அப்போது பெண்களின் கழுத்தில், பாதுகாப்பிற்காக ஒரு மஞ்சள் கயிற்றை அணிவித்தார்கள் நம்மவர்கள். "மாங்கல்யம் தந்துனானே" என்ற சமஸ்கிருத செய்யுள் பிற்காலத்தில் தேவைக்காக திருமணத்தில் சேர்க்கப்பட்டது. தந்து என்றால் கயிறு. என் வாழ்க்கையில் என்னோடு துணைவரும் உனக்கு மாங்கல்யம் என்ற இந்தக் கயிற்றை அன்புப் பரிசாக அளிக்கிறேன் என்று அர்த்தம். இந்துக்களின் புனித நிறம் மஞ்சள் என்பதால் திருமணப்பரிசும் மஞ்சள் நிறத்தில் கொடுக்கபபட்டது.

தமிழர் திருமணங்களில் தாலி இருந்ததாக சங்க இலக்கியங்களில் கூட குறிப்பிடப்படவில்லை.தாலம் என்றால், பனை மரம். முற்காலத்தில் குழந்தைகள் பனையோலைக் குருத்தில் நகை செய்து போட்டிருப்பார்கள். தாலம் என்ற சொல்தான் தாலியாக மாறியுள்ளது. கழுத்தில் நீளமாகத் தொங்கும் எல்லா நகைகளையும் தாலி எனறுதான் அப்போது குறிப்பிட்டார்கள்.

திருமணச்சின்னம் என்ற ரீதியில் தாலி என்ற பெயர் பதினோராம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டதாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தனது "தமிழர் திருமணம்" என்ற புத்தகத்தில் சொல்லியுள்ளது.

# சமயம்?

சமயம் என்றால் என்ன?
அதன் நோக்கம் என்ன?
அது ஏன் மக்களுக்குத் தேவைப்படுகிறது?
புலன்களுக்கு அடிமையாவதைத் தடுக்கும் ஆசை தோன்றும் போதுதான் மனிதனின் இதயத்தில் சமயம் தோன்றுகிறது. சமயத்தின் முழுநோக்கமே, மனிதன்

www.tamilarangam.net

புலன்களுக்கு அடிமையாகாமல் பார்த்துக்கொள்வதும், அவன் தன்னுடைய சுதந்திரத்தை வலியுறுத்த உதவி செய்வதும்தான்.

உலகில் இன்றுள்ள எல்லா சமயங்களையும் எல்லோரும் அறிய வேண்டும். பிற சமயங்களையோ, பிறரையோ இகழ்ந்து பேசாமலும், பிறரது குற்றங்களை எடுத்துக் காட்டுவதன் மூலம், வயிறு வளர்க்காமலும் இருக்க சமயங்களின் உண்மையை எடுத்துக் கூற வேண்டும். அனைத்து சமயங்களும் சுயநலமற்று இரு எனத்தான் கூறுகின்றன. இம் மதங்கள் அனைத்தும் தத்தமக்கென வேத நூல்களை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன.

<u>புத்தமதம்:</u> இது திரிபிடகம் எனும் வேதநூலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது.

<u>இஸ்லாம்மதம்:</u> திருக்குர் ஆன் எனும்வேத நூலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது.

<u>கிறிஸ்தவ மதம்:</u> பரிசுத்த வேதாகமம் எனும் வேதநூலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. (பரிசுத்தவேதாகமத்தின் புதிய, பழைய ஏற்பாடுகளைக் கொண்டு யெகோவாவின் சாட்சிகள், புதிய அப்போஸ்தலர்கள், சீயோன் திருச்சபை இன்னும் பல இயங்கிக் கொண்டிருக்கின்றன).

இந்த நான்கு மதப்பிரிவுகளில் இந்துமதத்தைத் தவிர்ந்த மற்றைய மூன்றும் இவ் உலகை தமதாக்கிக் கொள்ள போராடிக்கொண்டிருக்கின்றன. அனைத்துச் சமயங்களும் மூன்று பிரிவுகளை தன்னகத்தே கொண்டிருக்கின்றன.

ஒவ்வோர் சமயத்திற்கும் தத்துவம் ஒன்று உண்டு. அதாவது அதன் நோக்கம் அல்லது கொள்கை. இரண்டாவதாக அந்தத் தத்துவத்திற்கான விளக்கங்கள். இதில் ஞானிகளினதும் , தீர்க்கதரிசிகளினதும் வரலாறுகள் அறிவுரைகள் என்பன அடங்கும். இறுதியாக சமயத்திற்கான சடங்குகள். இதனுள் சமயங்களினது வழிபாட்டு முறைகள் (உருவ வழிபாடு, சின்னங்களை வழிபடுதல்) என்பன அடங்கும்.

புத்தமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாம்மதம் ஆகியவற்றில் தத்துவமும் அதற்கான விளக்கங்களும் ஒன்று சேர்ந்து பிரித்தெடுக்க முடியாதபடி பின்னிக்கிடக்கின்றன. அதாவது ஒவ்வோர் சமயத்தினதும் தத்துவத்தையும் அதன் கொள்கைகளையும் ஞானிகளினதும், தீர்க்கதரிசிகளினதும் வரலாறுகள் ஓங்கி வளர்ந்து விழுங்கி விட்டன. உதாரணத்திற்கு இயேசுவை ஒதுக்கிவிட்டு கிறிஸ்தவ மதத்தின் உண்மையான தத்துவத்தை மட்டும் ஒருவன் எடுத்துச் சொல்வதாக வைத்துக் கொள்வோம். அவனுக்கு என்ன நடக்கும். அவனை மக்கள் மதத்துரோகி எனவும், கிறிஸ்தவமதத்தை எதிர்ப்பதாகவும் கூறுவார்கள். இதே நிலைதான் புத்த மதத்திலும், இஸ்லாம் மதத்திலும் இருக்கின்றது. ஆனால்

www.tamilarangam.net

இந்துமதத்தில் தத்துவங்கள் தனித்தே இருக்கின்றன. அவற்றின் விளக்கங்களான புராணங்கள், உபநிடதங்கள் போன்றவைகளும் தனித்தே இருக்கின்றன. (பகவத்கீதை என்பதும் வேதங்களின் விளக்கமே).
மதப்பிரச்சாரர்களும் தத்துவத்தை மறந்து பிரச்சாரம் செய்கின்படியால் மக்கள் உணர்ச்சி வசப்பட்டு மிருக நிலையை அடைகிறார்கள். தத்துவத்தை எடுத்துரைத்தால் மக்கள் சிந்திப்பார்கள். தத்துவங்கள் விவேகத்தைத் தூண்டி உண்மை எது என்பதனை உணர வைக்கும்.

உலகில் இரண்டு வகையான பொருட்கள் உண்டு. ஒன்று உயிருள்ளது மற்றது உயிரற்றது. உயிரற்றது என்றால் அதில் சுதந்திரமான இயக்கம் இருக்காது. உயிருள்ள பொருளாயின் அங்கு ஓர் சுதந்திரமான இயக்கம் இருக்கும். உதாரணத்திற்கு புழு ஒன்றைப் பிடித்து அதை நசுக்க முற்படும் போது அது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அல்லது விடுவித்துக்கொள்ள முயற்சிக்கும். மனிதன் புழுவை விட மேலானவன். அறிவு என்பது அவனுக்கு உண்டு. அதைப் பயன்படுத்தி தான் யார்? என்பதனை உணர வேண்டும்.

நம் உடலில் அழியக்கூடிய பகுதியாக இந்த உடலும் அழியாத நிலையான பகுதியாக ஆன்மாவும் இருப்பதாக சமயங்கள் கூறுகின்றன. இதைவிட நிரந்தரமான அழியாத கடவுளும் இருப்பதாக உலகிலுள்ள எல்லா சமயங்களும் கூறுகின்றன. இந்து மதம் ஆன்மா அழிவில்லாதது எனக் கூறுகின்றது. இந்து மதத்தைத் தவிர்ந்த ஏனைய மதங்கள் உடல் தோன்றிய பொழுது ஆன்மாவும் தோன்றியதாக கூறுகின்றன. ஆன்மாவுக்குத் தொடக்கம் இருந்தால் முடிவும் இருக்க வேண்டும். ஆன்மா அழிவில்லாதது என்று கூறும் பொழுது அதற்குத் தொடக்கம் இல்லை என்பதை உணர வேண்டும். அப்படியாயின் அழிவற்ற இரண்டு பொருள்கள் உலகில் உண்டு. ஒன்று கடவுள், மற்றையது ஆன்மா. ஆன்மாவானது பரிபூரணமானது எனவும் அதுவே கடவுள் எனவும் இந்துமதம் கூறுகின்றது. (பகவத்கீதை எனும் உபநிடதத்தில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது) பரிசுத்த வேதாகமத்தில் (பைபிள்) ஆரம்ப மனிதனாகிய ஆதாம் பரிபூரணமானவன் என்றும் இயேசுகிறிஸ்துவிற்கு சமமானவன் எனவும் கூறப்பட்டுள்ளது. பரிசுத்தமான ஆன்மா தன் செயல்களினாலேயே மாசுபட்டதென்றும், அது மீண்டும் பரிசுத்தமாக வேண்டுமெனவும் பைபிளில் கூறப்பட்டுள்ளது.

எப்படி?

அதே பைபிளில் இயேசுவின் உதவியின்றி கடவுளை யாரும் காணமுடியாது எனக் கூறப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் வாழ்வின் நோக்கம் கடவுளைக் காண்பதுதான். மனிதன் தன்னுடைய செயல்களினால்தான் பரிசுத்தத்தை இழந்தான் என்றால் கடவுளுக்கும் அதற்கும் பொறுப்பு இல்லை. (இந்துமதத்தில் கூறப்படுகின்ற மறுபிறப்பு உண்டு என்பதனை நினைக்கவும்) ஆன்மாவிற்கு தொடக்கம் இருப்பதாக கருதினால், மனிதனின் மாசுகளுக்கு(பாவங்கள்) கடவுளே பொறுப்பாகின்றார். கருணையே வடிவான கடவுள் பாவியாகின்றார்.

ஆனால்கடவுள்பரிசுத்தமானவர். அவனவன் பாவங்களுக்கு அவனவனே பொறுப்பு. உதாரணத்திற்கு ஓர் கதை. ஒருவன் பியானோவில் ஒரு ராகம் வாசிக்கிறான். ஒவ்வொரு கட்டையின்மீதும் தன்னுடைய விரல்களை நினைவோடு வைக்கிறான். இந்த முறையை அவன் திரும்பத் திரும்ப செய்யும்போது விரல்களின் அசைவுகள் அவனுக்குப் பழக்கமாகிவிடுகின்றன. பிறகு அவன் கட்டைகளைக் கவனிக்காமல் வாசிக்கிறான். இதேநிலை தான்வாழ்க்கையிலும் நடக்கின்றது. நினைவோடு செய்த செயல்களின் பயன்தான் இப்போதுள்ள இயல்புகள். பிறக்கின்ற ஒவ்வோர் குழந்தையும் சில இயல்புகளுடன் தான் பிறக்கின்றன. இந்த இயல்புகள் இப்பிறப்பில் ஏற்பட்டிருக்க முடியாது. அதனால் போனபிறப்பில் ஏற்பட்டது என்றுதான் நினைக்கவேண்டும். சிலர் பரம்பரை என கூறுகின்றார்கள். பரம்பரை தான் காரணம் எனில் ஆன்மாவை நம்பவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும். பைபிளில் ஆபிரகாமுக்கு முன் நான் இருக்கிறேன் என இயேசு கூறுகின்றார். ஆரம்ப காலத்தில் இருந்த நிலைகள் இன்று மாறிவிட்டன. பைபிளில் பரமண்டலத்தில் இருக்கும் பிதாவே என்று கூறப்படுகிறது. இயேசு கூறியது நானும் என் தந்தையும் ஒன்று. அதாவது நானும் கடவுள்தான். நாம் அனைவரும் சமய அறிவைப் பொறுத்தவரையில் குழந்தைகளாகவே இருக்கிறோம். காரணம் "தேவனின் அரசு உங்களுக்குள்ளே இருக்கிறது" எனவும் "பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே" எனவும் கூறினார். முதல் கூறியது ஆன்மீகஞானம் உடையவனுக்கும் பின்பு கூறியது பாமர மக்களுக்குமாகும். இயேசுவின் போதனைகளை ஒருவரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் ஒன்றைத்தான் கூறுகின்றன என்பதனை மறக்கவேண்டாம். இறைவனை நாம் அடைய வேண்டும் என்பதுதான் அது. எமது பார்வைதான் தவறாக இருக்கின்றது. ஓர் இளம் பெண்ணும் ஒரு பாதிரியும் தொலைநோக்கி மூலம் சந்திரனில் இருந்த சில புள்ளிகளைப் பார்த்துவிட்டு பாதிரி அவை சில கோயில்களின் சிகரங்களாகத்தான் இருக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு அந்த இளம் பெண் நீங்கள் சொல்வது தவறு. அது இளம் காதலர்கள் முத்தமிடும் காட்சி என்றாள். இந்த உலகைப் பொறுத்தவரையில் நாம் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். நாம் எந்த வாழ்க்கைத் தரத்தில் இருக்கிறோமோ, அதற்கு ஏற்ற மாதிரித்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் பார்க்கிறோம். மூடநம்பிக்கையையே ஏற்பதாயின் பகுத்தறிவு ஏன் அளிக்கப்படவேண்டும்.? பகுத்தறிவிற்கு எதிராக நாம் நம்பினால் அது கடவுளுக்குச் செய்யும் பெரிய துரோகமாகும். எமது முன்னோர்கள் சொன்ன கதைகளை ஆராயாமல் நம்பிவிட்டோம். இனியாவது பகுத்தறிவைக் கொண்டு ஆராய்வோம். வித் என்றால் அறிவு. வித் என்ற சொல்லில் இருந்துதான் வேதம் என்ற சொல்தோன்றியது. ஆனபடியால் வேதங்களை அறிவோம். ஆன்மாவானது ஏன் வேறு உடலில் புகவேண்டும்? . என்னை நானே பார்த்துக்கொள்ள வேண்டுமானால் கண்ணாடி ஒன்று வேண்டுமல்லவா. அதேபோல் ஆன்மாவின் பிம்பம் உடலில் பிரதிபலிக்கிறது. நாம் ஓர் இருட்டறையில் இருந்து கொண்டு முனகினாலும் அழுதாலும் இருட்டைப் போக்கமுடியாது. அந்த இருட்டைப்போக்க விளக்கேற்ற வேண்டும். அதனுடைய தெய்வத்தன்மையைக் காணுங்கள். நீங்கள் தெய்வீகமானவர்கள் என்று உங்கள்

www.tamilarangam.net

*குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். ஆன்மாவை உணராதவரை உங்களுக்குச் சுதந்திரம் கிடையாது. வெறும் பேச்சோ, கொள்கையோ, தர்க்கமோ உதவாது. நாம் தன்னம்பிக்கையை இழந்துவிட்டோம். பலவீனமாகிவிட்டோம். பலவீனத்தால் அறியாமை ஏற்பட்டு துக்கங்களும், கவலைகளும் எம்மை ஆக்கிரமித்துவிட்டன. இதனால் கருணையே வடிவான கடவுளிடம் அற்பபொருளைக் கேட்கின்றோம். உண்மையில் நாம் முட்டாள்களே. அவரிடம் உயர்ந்த பொருளுக்காகப் போவோம். கங்கைக் கரையில் இருந்து கொண்டு கிணறு தோண்டுகிறவன் பெரிய முட்டாள். இயேசு தன்னைக் கொல்ல வந்தவர்களையே வாழ்த்தினார். இதற்குக் காரணம் என்ன? ஆன்மா அழிவில்லை என்பதுதானே. உண்மையை மாற்றி மக்களை ஏமாற்றுபவர்கள் இப்போ அதிகம். பரவசம் வந்த கதை ஒன்று இதோ:*

என் நண்பர் ஒருவரிடம்வெகு அழகான படம் ஒன்று இருந்தது. சமய நம்பிக்கை உள்ள ஒரு பணக்காரர் இந்தப் படத்தின்மீது கண்ணாக இருந்தார். ஆனால் படத்தை விற்க என் நண்பர் விரும்பவில்லை. ஒருநாள் அந்தப் பணக்காரர் என் நண்பரைப் பார்த்து, *எனக்குப் பரவசம் வந்தது, கடவுளிடம் இருந்து எனக்கு ஒரு செய்தி வந்துள்ளது என்று சொன்னார்.* என்ன செய்தி? என்று கேட்டார் நண்பர். அந்தப்படத்தை நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் செய்தி என்றார் அவர். என் நண்பர் திறமைசாலி. அவர் உடனே, *என்ன ஆச்சரியம் எனக்கும் பரவசம் வந்தது. எனக்கும் செய்தி வந்தது. அந்தப் படத்தைக் கொடுக்கவேண்டாமென்று.* சரி காசோலை எங்கே? என்று கேட்டார். காசோலையா? எந்தக் காசோலை? என்றார் அவர். என் நண்பர் சொன்னார், அப்படியானால் உங்களுக்கு வந்த பரவசம் சரியில்லையென்று நினைக்கிறேன். ஏனெனில் எனக்கு வந்த செய்தி தங்களிடம் ஒரு இலட்சம் டாலர் வாங்கிக்கொண்டு படத்தைக் கொடுக்கும்படி சொல்லிற்று. ஆகவே முதலில் காசோலையைக் கொண்டுசாருங்கள் என்றார். பணக்காரர் தாம் அகப்பட்டுக்கொண்டோம் என்று தெரிந்து, அன்றிலிருந்து பரவசம் வந்தது என்று சொல்லுவதை விட்டுவிட்டார்.

*இவைதாம் ஆபத்துகள்.*

| |
|---|
| *மனமே! சோம்பேறி தானும் வாழமாட்டான்<br>பிறரையும் வாழ விடமாட்டான்* |

*"கல்வியின் நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதே"*

www.tamilarangam.net

# குறள் விளக்கம்

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

ஒருவன் பேசுவது உண்மையா? பொய்யா? என்பதற்கு முதலாவது சாட்சி அவனுடைய உள்ளம். தான் பேசும் பொய் தன்னைத்தவிர, வேறு யாருக்கும் தெரியாது என்று ஒருவன் கருதுவதால் மட்டும் அது உண்மையாகாது. பொய் பேசும் ஒருவனுடைய பேச்சுக்களை நாம் நினைவில் வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. பொய்மைகள் தாமாகவே நமக்கு மறந்து போகின்றன. அவை மறைந்தும் போகின்றன. தன் உள்ளத்தோடு பொய்யாமல் ஒருவன் ஒழுகும்போதுதான் அவன் உண்மையுள்ளவனாகிறான். அப்படிப்பட்டவன் ஞாயிறு போன்றவன். உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் விளங்கத்தக்கவன். உண்மை பேசுவது என்பது மொழியைச் சரியாக ஆளும் நெறிகளில் ஒன்று. மொழியைச் சரியாக ஆளும் திறமும் அதற்கேற்ற அறிவும் வாய்க்காத ஒருவன் தொடர்ந்து உண்மை பேச முடியாது.

## நாம் ஏன் ஊர்க்கதை அளக்கிறோம்?

மற்றவர்களைப் பற்றி வம்பு பேசுவது ஏன் அல்வா சாப்பிடுகிற மாதிரி இருக்கிறது? இதற்குக் காரணம் மனிதருக்கு எல்லாருடனும் ஒட்டி வாழ வேண்டுமென்பது பிறவிக்குணம். இதை இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் ஜனங்களுக்கு மற்றவர்கள் பேரில் கரிசனை இருக்கிறது. அதனால் நாம் பேசும்போது நண்பர்கள், நமக்கு அறிமுகமானவர்கள் ஆகியோருடைய வாழ்க்கையில் தற்சமயம் என்ன நடக்கிறது என்பதைப்பற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் பேசுவது இயல்பானதே. அது தவறா? எல்லா சமயத்திலும் அது தவறென்று சொல்லமுடியாது. யார்யாருக்கு திருமணமாகப் போகிறது, யாருக்கு சமீபத்தில் குழந்தை பிறந்தது, யார் உடல் நலமில்லாமல் இருக்கிறார்கள் போன்ற உபயோகமான தகவல்களை, இவ்விதம் பேசுவதால் தெரிந்துகொள்ள முடிகிறது. சில சந்தர்ப்பங்களில் வம்பளப்பதற்காகவே இருக்கலாம். ஒரு விஷயத்தை யாராவது சொன்னவுடன் அதைவிட அட்டகாசமான ஒரு விஷயத்தை தான் எடுத்துவிட்டால்தான் தனக்கு மதிப்பு என்பதாக நினைக்கிறார்கள். மற்றவர்களை அசத்த வேண்டுமென விரும்பும் , ஊர்க்கதை பேசுபவனுக்கு உண்மைகளைத் திரித்து சொல்ல அதிக நேரமாகி

www.tamilarangam.net

*விடாது. உப்புச்சப்பு இல்லாத விஷயத்தையும்கூட கண் காது வைச்சு நினைச்ச மாதிரி ஒரு ஓவியமா மாத்திடலாம். சில சமயங்களில் ஒருவரைப் பழி வாங்க வேண்டும் என்பதற்காகவே அவரைப்பற்றி கிசுகிசுக்கின்றனர். வேதனையான உண்மை என்னவென்றால் அநேகர் தங்களுடைய நாவை அழிப்பதற்கே பயன்படுத்துகின்றனர். அவர்கள் தங்கள் நாவை வாளைப்போல் கூர்மையாக்குகின்றார்கள். நஞ்சுள்ள சொற்களை அம்புபோல் எய்கின்றார்கள். ஆகவே மற்றவர்களைப்பற்றி ஏதாவது சொல்வதற்கு முன்பு உங்களை நீங்களே பின்வரும் கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள். எனக்கு எல்லா தகவல்களும் உண்மையிலேயே தெரியுமா? மற்றவர்களைப்பற்றி நான் கிசுகிசு பேசினால் என்னை மற்றவர்கள் எப்படி எடை போடுவார்கள்? ஊர்வம்பு பேசுகையில் உங்களைப்பற்றிய சில காரியங்களை நீங்களே சொல்லாமல் சொல்லிவிடுகிறீர்கள். அதாவது நீங்க மத்தவங்களைப்பற்றி இவ்வளவு நேரம் பேசினால் நீங்க ஒரு சரக்கில்லாத ஆசாமி சரியான வெத்து வேட்டுத்தான் என்பதாகும்.*

## வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

***ஆயினும் எமக்கு வாசிப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவு. கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் பெரிய பெரிய புத்தகங்களைப் படிப்பதற்குரிய மனப்பக்குவமும் பொறுமையும் வாய்ப்பதில்லை. இச்சந்தர்ப்பத்தில் அவ்வப்போது படித்த, எல்லோருக்கும் பயன்படக்கூடியன என்று கருதும் விடயங்கள் சில இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இது ஒரு சிறு முயற்சிதான்.***

நீங்கள் படிப்பவைகளுள்ளும் பிறருக்குப் பயன்படும் எனக் கருதுபவைகளை அறிவோர் பக்கத்திற்குச் சேர்ப்பியுங்கள்.

தொடர்புகளுக்கு: *Varatharajah, 6 R. Champs de la ville, 45500 Gien* ,France